மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முழுமையாக கணினிமயமாக்கும் பணிகளை 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கால அவகாசம் எதற்காகத் தேவைப்படுகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் செயல்படும் 33,839 நியாய விலை அங்காடிகள், 227 பொது விநியோகத் திட்டக் கிடங்குகள், 241 வட்ட மண்டல அலுவலகங்கள் மற்றும் மாவட்ட மாநில தலைமை அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து, மொத்தமுள்ள 1 கோடியே 97 இலட்சம் குடும்ப அட்டைகளின் விவரங்களையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

11—

பால் குளிரூட்டும் நிலையம்

***22772—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

சங்ககிரி தொகுதியில் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் வகையில் தலா ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவு

2014 ஜனவரி 31]

கொண்ட ஆறு தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் நிறுவிட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது, தரமான பால் கொள்முதல் செய்ய ஊக்கப்படுத்தப்பட்டு வருவதால், பால் குளிரூட்டும் நிலையங்களுக்குப் பதிலாக, தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. மேலும், சங்ககிரி தொகுதியில் ஆறு புதிய பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைக்கும் திட்டம் இருப்பதால், சங்ககிரி தொகுதியில் மேலும் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, சங்ககிரி தொகுதியில் ஆறு இடங்களில் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எனவே, சங்ககிரி தொகுதியில் தாரமங்கலம் ஒன்றியத்தில் பணிக்கனூர், பவளதாதனூர் ஆகிய இடங்களிலும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில், அழகனூர், கூத்தாடிபாளையம் ஆகிய இடங்களிலும் தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதியில் 83 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதன்மூலம், நாள் ஒன்றுக்கு சராசரியாக 21,895 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 2,120 லிட்டர் உள்ளூர் விற்பனை போக மீதமுள்ள 19,775 லிட்டர் பால் அருகிலுள்ள பரமத்திவேலூர் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் சேலம் பால் பண்ணைக்கு

அனுப்பப்படுகிறது. பாலின் தரத்தை உயர்த்தவும், பால் கொள்முதல் அளவினை அதிகரிக்கவும், போக்குவரத்துச் செலவினைக் குறைக்கும் நோக்கிலும், சங்ககிரி தொகுதியில் தலா ஐந்தாயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆறு தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள், ரெட்டிபாளையம், வடுகப்பட்டி, வைகுந்தம், வளையகாரனூர், கள்ளிப்பாளையம், வருதம்பட்டி மற்றும் ஒலக்கசின்னானூர் ஆகிய சங்கங்களில் மொத்தம் முப்பதாயிரம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் நிறுவிட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இதன்மூலம், சங்ககிரி தொகுதியில் உள்ள அனைத்துச் சங்கங்கள் மட்டுமின்றி அருகிலுள்ள பிற தொகுதிக்குட்பட்ட சங்கங்களும் பயனடையும். தற்போது, தரமான பால் கொள்முதல் ஊக்கப்படுத்தப்பட்டு வருவதால் பால் குளிரூட்டும் நிலையங்களுக்குப் பதிலாக தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. மேலும், சங்ககிரி தொகுதியில் ஆறு பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைக்கும் திட்டம் இருப்பதாலும், அங்கு கூடுதலாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவேண்டிய தேவை தற்போது எழவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த ஒன்றியங்களில் பால் வரத்து அதிகமாக இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, பரிசீலனை செய்து அமைத்துத் தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் கேட்ட கேள்விக்கு பரிசீலித்து அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல், ஆவின் ஐபிஎல் கலப்புத் தீவனங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியம்

2014 ஜனவரி 31]

மார்ச் மாதத்துடன் முடிகிறது. தற்போது வறட்சி நிலை தொடர்வதால் கலப்புத் தீவனங்களுக்கு வழங்கும் மானியத்தைத் தொடர்ந்து வழங்க தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கேட்காமலேயே கொடுக்கின்ற அரசு. அந்த வகையிலே தமிழகத்திலே வறட்சி நிலவுகின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்கள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெறாமலேயே, விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கும், பால் உற்பத்தியாளர்களுக்கும் வறட்சியைக் கருதி மானியம் வழங்கினார்கள். தற்போது அந்த மானியம் முடியும் தருவாயில் இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுடைய நலனை, வளர்ச்சியை மனதிலே கொண்டு, பரிசீலனை செய்து, அதற்குரிய திட்டத்தை வழங்குவார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குன்னம் தொகுதியானது பால் உற்பத்தியாளர்கள் அதிகம் நிறைந்திருக்கின்ற தொகுதி. குறிப்பாக, குன்னத்திலேயே மிகப்பெரிய பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கம் இருக்கிறது. அதேபோல் அருகே இருக்கின்ற பேரளி, வயலூர் போன்ற பல கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மிக அதிக அளவிலே பால் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, குன்னத்திலே பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்திலே வெண்மைப் புரட்சியை உருவாக்குவதற்காக பல திட்டங்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அந்த வகையிலே எங்கெல்லாம் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு அம்மா அவர்கள் திட்டம் வகுத்துத் தந்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் பால் வரத்து அதிகமாக இருப்பின், அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

கால்நடை மருத்துவமனை

***22063—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், சேதுராயன்புதூரில் கால்நடை மருத்துவமனை அல்லது கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருநெல்வேலி தொகுதி, சேதுராயன்புதூர் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமத்திலும், கால்நடை விதிகளுக்கு உட்பட்டு, 5 ஆயிரம் கால்நடைகளுக்கும் அதிகமாக உள்ளதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அங்கே ஒரு கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.